# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 யூலை

# (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

*பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பல பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் குறிப்பிட்ட குறைபாடுகள் இருந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. விடைகளை மதிப்பீடு செய்த பரீட்சகர்களின் அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன :*

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01** – 40 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

ஒவ்வொன்றும் 02 புள்ளிகளைக் கொண்ட 20 வினாக்கள். மொத்தம் 40 புள்ளிகள்.

அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்து ஆக்கபூர்வமான மட்டத்தில் புள்ளிகளைப் பெற்றிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பகுதிகளுக்கான விடைகளில் குறைபாடுகள் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகளும் ஏனைய கருத்துக்களும் கீழே தரப்படுகின்றன.

**1.1** இவ்வினாவின் மூலம் நுண் பொருளியல் பற்றிய அறிவினைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. அரிதான தன்மையானது பொருளியலின் அடிப்படையாகக் கருதப்படுவதுடன் அடிப்படைப் பொருளியல் வினாக்கள் தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதில் ‘‘தெரிவு’’ மற்றும் ‘‘சந்தர்ப்பச் செலவு’’ ஆகியன பரீட்சிக்கப்பட்டன. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** பொருளியலில் பயன்படுத்தப்படுகின்ற கேள்வி எண்ணக்கருவில் பரீட்சார்த்திகளின் கொண்டுள்ள புரிதல்களைப் பரீட்சிப்பதற்காக சந்தைச் சமநிலை மற்றும் நெகிழ்ச்சித்தன்மை என்பன இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை அளித்திருந்தனர்.

**1.3** இவ்வினா சந்தைக் கட்டமைப்பு பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையான ‘‘தனியுரிமை’’ என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.4** பரீட்சார்த்திகள் உற்பத்தி மற்றும் கிரய எண்ணக்கருவின் கீழான வெளியீட்டின் நகர்வு பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கின்றனரா என்பதை இவ்வினாவின் மூலம் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர்.

**1.5** இவ்வினாவானது கட்டற்ற சந்தை முறைமையில் அரசாங்கத்தின் தலையீட்டினது எதிர்விளைவுகள் மீதான பரீட்சார்த்திகளின் நடைமுறைப் புரிதலைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டிருந்தது. உயர்ந்தபட்ச விலை என்னும் எண்ணக்கருவை விளங்கிக்கொண்டிராத காரணத்தால் அதிகளவான விடைகள் பிழையானதாகக் காணப்பட்டன.

**1.6** பண நிரம்பலின் வகைப்படுத்தல் தொடர்பான வரைவிலக்கணங்கள் பற்றிய புரிதல் மற்றும் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் விடைகள் பிழையானதாக இருந்தமை

அவதானிக்கப்பட்டது. இது மேலுள்ள எண்ணக்கரு மீதான அறிவு போதியதாக இல்லை என்பதையே காட்டுகிறது.

**1.7** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டிகளிலிருந்து தரப்பட்ட தரவுகளைக் கொண்டு, பணவீக்க வீதத்தை கணிப்பிடுவதற்கான கணிதத் தீர்வுகளைப் பெறுவதில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர். பரீட்சிக்கப்பட்ட சகல விடைத்தாள்களிலும் காணப்பட்ட விடைகள் திருப்தியற்றவையாகவே காணப்பட்டன. இது அந்த விடயப் பரப்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைவாகக் காணப்பட்டதையே காட்டுகிறது.

**1.8** இவ்வினா பணப் பெறுமதி தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ''பணத்தின் உள்ளக உண்மைப் பெறுமதி'' என்ற சரியான விடையை எழுதுவதற்குத் தவறியிருந்தனர். பணத்தின் பெறுமதி தொடர்பில் சரியான புரிதலைக் கொண்டிருக்காத காரணத்தால் அவர்களால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**1.9** இவ்வினாவானது பேரினப் பொருளாதாரம் ஒன்றின் பிரதான பிரிவுகளுக்கிடையே தேசிய வருமான வட்டத்தின் பாய்வுக்கான உட்பாய்ச்சல்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கும்கூட திருப்தியற்ற விடைகளை வழங்கிய பரீட்சார்த்திகள் அதிகமாகக் காணப்பட்டனர்.

**1.10** இவ்வினா நடைமுறை அறிவினைப் பரீட்சிக்கும் ஓர் வினாவாகக் காணப்பட்டது. மத்திய வங்கி அறிக்கை போன்ற பாடத்துடன் சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் பரிச்சயத்தைக் கொண்டிருக்காததால் அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்தியற்ற விடைகளையே அளித்திருந்தனர்.

**1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானவையா அல்லது தவறானவையா என்பதை இனங்காண்பதன் மூலம் சரியான விடையைத் தெரிவுசெய்யுமாறு பரீட்சார்த்திகள் கோரப்பட்டிருந்தனர். மொத்தத்தில் இந்த வினாக்களுக்கு அளிக்கப்பட்டிருந்த விடைகள் திருப்திகரமானதாக அமைந்திருந்தனவாயினும் வினா இல. **1.12** இற்கு பரீட்சார்த்திகள் அளித்திருந்த விடைகள் பிழையானதாகக் காணப்பட்டன. இது பயன் கோட்பாடு மீதான பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாகக் காணப்படவில்லை என்பதையே காட்டுகிறது. அதேபோன்று வினா இல. **1.14** இல் கேட்கப்பட்டிருந்த பணத்திற்கான கேள்வி பற்றிய கோட்பாடு மீதான அறிவும் புரிதலும்கூட போதுமானளவு மட்டத்தில் காணப்படவில்லை.

**1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில் இரு விடைகள் வழங்கப்பட்டு அதிலிருந்து சரியான ஒரு விடையினைத் தெரிவுசெய்யுமாறு பரீட்சார்த்திகள் கோரப்பட்டிருந்தனர். இங்கு வினா இல. **1.19** இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் பிழையான விடையினையே எழுதியிருந்தனர். அவர்கள் ''மிகையான வட்டி வீதம்'' என்பதைத் தெரிவுசெய்திருந்தனர். மேலும், வினா இல. **1.20** இற்கு, அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையென ''பொருளாதார அபிவிருத்தி'' என்பதைப் பிழையாகத் தெரிவுசெய்திருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் மேலுள்ள விடயங்கள் தொடர்பான அறிவையும் புரிதலையும் மேம்படுத்திக்கொள்வது அவசியமானதொன்றாகும்.

## பகுதி B

ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்கள்.

**வினா இல. 02** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

(a) இது உற்பத்திச் சாத்திய வளையி (PPC) பற்றிய அறிவைப் பரீட்சிக்கும் ஒரு எளிமையான வினாவாக இருப்பதுடன், இங்கு உள்ளார்ந்த எடுகோள்கள் மூன்றினைக் குறிப்பிடுதல் எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், இக்கோட்பாடு தொடர்பில் சரியான புரிதல் இன்மையால் PPC இன் வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டிருந்த பிழையான விடைகளும் காணப்பட்டிருந்தன.

(b) இங்கு பொருளாதார முறைமைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்கும் நோக்கில் முதலாளித்துவப் (சந்தை) பொருளாதாரத்தை சமவுடமைப் (திட்டமிடப்பட்ட) பொருளாதாரத்துடன் ஒப்பிட்டு மூன்று வேறுபாடுகளை குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்திருந்த போதிலும் குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் திருப்தியற்ற விடைகளை அளித்திருந்தனர். அவர்களால் விடப்பட்ட தவறுகள் பின்வருமாறு :

- ஒரேயொரு பொருளாதார முறைமையின் பண்பியல்புகளை மாத்திரம் குறிப்பிட்டிருந்தமை
- இரு பொருளாதார முறைமைகளினதும் கட்டமைப்புகளை ஒப்பிடாது விடயங்களைக் குறிப்பிட்டிருந்தமை
- சந்தைக் கட்டமைப்புகளின் பண்பியல்புகளைக் குறிப்பிட்டிருந்தமை

கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாக இல்லை என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

(c) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வழங்கப்பட்ட கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளைப் பயன்படுத்திப் பண்டத்தின் சமநிலை விலை மற்றும் கணியத்தினைச் சரியாகக் கணித்திருந்தனர். குறைபாடுகள் காணப்பட்ட விடைகளின் மத்தியில் சில விடைகளில் கூட்டல் மற்றும் பெருக்கல்களில் எண்கணித வழுக்கள் காணப்பட்டிருந்தன.

**வினா இல. 03** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

(a) உற்பத்தி எண்ணக்கரு பற்றிய அறிவு மற்றும் புரிதலைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இவ்வினாவுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்டிருந்த விடைகள் பிழையானதாக இருந்ததுடன் பல விடைத்தாள்களில் இவ்வினாவுக்கு விடையளிப்பதற்கு முயற்சிகூட செய்யப்பட்டிருக்க வில்லை. மொத்த உற்பத்தியானது உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையினது அதிகரிப்பாக அவர்களால் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், சராசரி உற்பத்தி என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளது அலகுகளின் எண்ணிக்கை ஒரே மட்டத்தில் காணப்படுதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததன் மூலம் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் மொத்த உற்பத்தி = சராசரி உற்பத்தி + எல்லை உற்பத்தி என பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் பகுதியளவில் சரியான விடையினை அளித்திருந்ததிலிருந்து பரீட்சார்த்திகளிடம் இந்த எண்ணக்கரு தொடர்பில் போதுமானளவு அறிவு காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

(b) தனியுரிமை மற்றும் தனியுரிமைப் போட்டி ஆகியவற்றினை ஒப்பிடுவதன் ஊடாக வேறுபாடுகளை எழுதுவதன் மூலம் சம்பந்தப்பட்ட எண்ணக்கரு தொடர்பான புரிதலை இவ்வினா பரீட்சித்திருக்கிறது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான முறையில் விடையளித்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது:

- தனியுரிமை பற்றிய விடயங்களை மாத்திரம் எழுதியிருந்தமை,
- ஒரே விடயங்களைப் பல்வேறுபட்ட வழிமுறைகளில் எழுதியிருந்தமை,
- எண்ணக்கரு பற்றிய சரியா புரிதல்கள் இல்லாமல் விடயங்களை எழுதியிருந்தமை போன்றவை எழுதப்பட்டிருந்த விடைகளில் அவதானிக்கப்பட்ட சில குறைபாடுகளாகும். கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் மாத்திரமே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

**வினா இல. 04** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

(a) இவ்வினாவின் மூலம் சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தினது தலையீட்டினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான அறிவையும் புரிதல்களையும் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் மானியம் ஒன்றை வழங்குவதால் ஏற்படும் விளைவுகளைச் சரியானவாறு விபரிப்பதற்கு வரைபினைப் பயன்படுத்தியதைக் காணக்கிடைக்கவில்லை. அவதானிக்கப்பட்ட பிரதான குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

- வரைபில் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் சரியானவாறு பெயரிடப்படவில்லை.
- வலப்பக்கத்திற்கு நிரம்பல் வளையியை நகர்த்தாது விபரிப்புச் செய்யப்பட்டிருந்தமை போன்றவை.

சில பரீட்சார்த்திகளால் வரைபின் உதவியுடன் சம்பந்தப்பட்ட எண்ணக்கருவைச் சரியானவாறு விபரிப்பதற்கு முடிந்திருந்தது. மேலும், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களிடையே மானியத்தின் நன்மைகளது பகிர்வினைத் தீர்மானிப்பதானது சம்பந்தப்பட்ட பொருளின் கேள்வி மற்றும் நிரம்பல் மீது செய்யப்படக்கூடியது என்பதை எழுதுவதற்கான ஆற்றல் காணப்படாமையால் அதிகளவான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

(b) (i) இந்தப் பகுதியின் மூலம் என்ன எதிர்பார்க்கப்பட்டதென்றால், சந்தைப் பொருளாதார முறைமையில் அரசாங்கம் தலையீடு செய்வதற்கான காரணங்களைப் பரீட்சிப்பதாகும். இந்தப் பகுதிக்கும்கூட மிகவும் திருப்தியற்ற விடைகளே வழங்கப்பட்டிருந்தன.

விடையளித்திருந்த அதிகமான பரீட்சார்த்திகள், விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் வரி விதிப்பு பற்றியே எழுதியிருந்தனர். அவர்கள் சந்தை வீழ்ச்சியை சீர்செய்வது பற்றியோ, அரசாங்கத்தின் தலையீடானது வருமானம் மற்றும் வளத்தின் சம பங்கீட்டிற்கானது என்பது பற்றியோ எழுதியிருக்கவில்லை. இப்பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த இரண்டு புள்ளிகளில் அதிகளவான பரீட்சார்த்திகள் ஒரு புள்ளியை அல்லது பூச்சியப் பூள்ளியைத்தான் பெற்றிருந்தனர்.

(ii) மானியங்கள் வழங்குவதைத் தவிர சந்தைப் பொருளாதார முறைமையில் அரசாங்கம் தலையீடு செய்யக்கூடிய வேறு இரண்டு முறைகளை குறிப்பிடுவதற்கு இங்கு எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் விலைக் கட்டுப்பாடு மற்றும் வரி விதிப்பு ஆகியன பற்றி எழுதி, இரண்டு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் அவர்கள் ‘‘நேரில்’’ வரிகள் என்னும் பதத்தினைக் குறிப்பிடத் தவறியிருந்தனர். அத்துடன், பொது முயற்சியாண்மை, பொதுப் பொருட்களின் நிரம்பல் மற்றும் பங்குவீத விதிப்பனவு போன்றவை பற்றியும் எழுதுவதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் இந்த விடயங்கள் தொடர்பில் சரியான புரிதல்களைக் கொண்டிருக்கவில்லை என்பது விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும்போது தெளிவாகத் தெரிந்தது.

**வினா இல. 05** – 10 புள்ளிகள்
**(கட்டாய வினா)**

(a) இவ்வினாவின் நோக்கம் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய கோட்பாட்டுரீதியான எண்ணக் கருக்கள் பற்றிய அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதாகும். சம்பந்தப்பட்ட ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின் அடிப்படையில் தரப்பட்ட தரவுகளின் கணிப்பீடுகளின் ஊடாக ஒவ்வொரு பொருளுக்குமான ஒப்பீட்டு நயத்தைக் காட்டவேண்டியிருந்தது. இதற்காக, ஒவ்வொரு பொருளினதும் மிகக்குறைந்த சந்தர்ப்பச் செலவினைக் கணிப்பிட வேண்டியிருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் இக்கணிப்பீட்டைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள் முழு நயத்தின் அடிப்படையில் விடைகளை வழங்கியிருந்தனர். இது ஒப்பீட்டு நய எண்ணக்கரு தொடர்பான பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவு போதுமானதாக இருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

(b) இவ்வினா அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயை மதிப்பிறக்கம் செய்வதால் ஏற்படும் நான்கு விளைவுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். பரீட்சார்த்திகள் இதற்கான விடையாக டொலருக்கும் ரூபாய்க்குமிடையிலான வேறுபாடுகளை எழுதியிருந்தனர்.

உதாரணமாக, ரூபாய் சிறிய நாணயமொன்று எனவும் டொலர் பெரிய நாணயமெனவும், பெயரளவுப் பெறுமதி எதிர்காலத்தில் பயன்படுத்தப்பட முடியாதெனவும் அத்துடன் டொலர் பெறுமதியின் ரூபாய்ப் பெறுமதியினை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றியும் எழுதியிருந்தனர்.

இதற்கிணங்க, ரூபாயின் மதிப்பிறக்கம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுவதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. பல பரீட்சார்த்திகள் அதே பிழையான விடையினை பல தடவைகள் மீண்டும் மீண்டும் எழுதியிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06** – 20 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

**(A)** **(i)** இவ்வினாவானது இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் பண்புரீதியான (தர ரீதியான) கட்டுப்பாடுகளைக் கூறுமாறு கேட்டிருந்தது. இதற்குப் பல பரீட்சார்த்திகள் பூரணமாக விடையளிக்காததைக் காணக்கூடியதாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வர்த்தக வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வகைகள், வங்கி வட்டி வீதம் மற்றும் மாறுகின்ற ஒதுக்க வீதம் போன்ற மத்திய வங்கியின் பண்புரீதியான கட்டுப்பாடுகளை விடையாக எழுதியிருந்தனர்.

இவ்வினாவுக்கு மத்திய வங்கியின் இரண்டு நாணயக் கட்டுப்பாட்டு உபாயங்களில் ஒன்றான பண்புசார் கட்டுப்பாட்டு முறைகளை அடையாளம் கண்டிருக்க முடியும். நாணயப் பாய்வின் திசையைக் கட்டுப்படுத்தல் என்பதையே இது கருதுகிறது. எதிர்பார்க்கப்பட்ட பண்பு ரீதியான கட்டுப்பாட்டு முறைகள் நாணய நிரம்பலை பண்புரீதியாக குறைக்கிறதா அல்லது அதிகரிக்கிறதா என்பது பற்றி பரீட்சார்த்திகள் குழப்பமடைந்திருந்ததன் காரணமாக அவர்களால் சரியான விடையினை எழுத முடிந்திருக்கவில்லை.

**(ii)** வங்கிகள் இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை ஆகியவற்றுக்கிடையில் சமநிலையைப் பேணுவதில் சவால்களை எதிர்நோக்கவேண்டியிருக்கின்றன. பல பரீட்சார்த்திகள் இந்த வினாவில் கூறப்பட்டதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. சில பரீட்சார்த்திகள் வர்த்தக வங்கிகளின் நடைமுறைச் சொத்துகளின் கீழ் வருகின்றன திரவச் சொத்துகள் பற்றி குறுகிய விபரிப்பொன்றினை எழுதியிருந்தனர். அவர்கள், காசானது மிகவும் திரவத்தன்மை வாய்ந்த சொத்தாகும் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும், எதிர்பார்க்கப்பட்ட சரியான விடையினை சமர்ப்பிப்பதற்கான புரிதல்கள் அவர்களிடம் காணப்பட்டிருக்கவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகளான 4 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(B)** இவ்வினா தேசிய வருமானக் கணக்கீட்டின் நடைமுறைப் பாவனை மற்றும் புரிதல்கள் பற்றிப் பரீசித்திருந்தது. சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் மாத்திரமே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

சில பரீட்சார்த்திகள் மொத்த உள்நாட்டுச் செலவினைக் கணிப்பதற்கு தனியார் நுகர்வுச் செலவிலிருந்து மூலதனத் தேய்மானத்தைக் கழித்திருந்தனர், ஆயினும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தை கூட்டியிருக்கவில்லை.

**(C)** இவ்வினா மூன்று பேரினப் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குத் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்தனர்.

\- - -

## பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள் :

1. பாடத்திட்டத்தை முழுமையாகக் கற்றுத் தெளிவதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.
3. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. விசேடமாகச் சுய கற்றல் புத்தகங்கள், புத்தகங்கள், கையேடுகள், ஆவணங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புபட்ட ஏனையவைகளை கற்கவும்.
5. வரைபடங்களைச் சரியாகப் பெயரிட்டு விபரிக்கவும்.
6. விடையெழுதும்போது அடிப்படை கோட்பாட்டுரீதியான எண்ணக்கருக்களைச் சரியாக இனங் காணப்தற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களைக் கட்டியெழுப்பவும்.
7. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடங்களில் ஏற்றவாறு இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
8. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
9. கடந்தகால வினாப்பத்திரங்களையும் விடைகளையும் கற்பதன் மூலம் உங்களது அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.
10. பொருளியல் கோட்பாடுகளைச் சரியாக விளங்கிக்கொள்வதன் மூலம் அதனுடன் தொடர்புடையவைகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கட்டமைப்பதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும்.
11. நேர முகாமைத்துவம் முக்கியமானது.
12. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் சரியான இடங்களில் எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
13. முன்னாயத்தத்துடனும் இயலுமான புள்ளிகளைப் பெறுகின்ற எதிர்பார்ப்பிலும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -`